பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**04 07 2026** **SATURDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** துணிச்சலான ஊடகங்களே ஜனநாயகத்தின் வலிமை என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2.** மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜோத்பூரில் இன்று தொடங்கி வைக்கிறார்.

**3.** ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

**4.** பயிர்க் கடன் தள்ளுபடி குறித்து முதலமைச்சருடன் ஆலோசித்த பிறகு அறிவிப்பு வெளியிடப்படும் என்று வேளாண்துறை அமைச்சர் திரு. வினோத் கூறியுள்ளார்.

**5.** நாட்டிலேயே பள்ளிகளில் செஸ் போட்டிகளை நடத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது என்று கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

துணிச்சலான ஊடகங்களே ஜனநாயகத்தின் வலிமை என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று **Organiser** வார இதழின் **80**வது ஆண்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், அவசர நிலை காலத்தின்போது இந்த இதழ் துணிச்சலாக செயல்பட்டதை நினைவுகூர்ந்தார்.

துடிப்புள்ள ஜனநாயகத்திற்கு பொறுப்பான ஊடகங்களின் செயல்பாடு அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகம் செழிக்க வேண்டும் என்றால் பத்திரிகைகள் அச்சமின்றி கருத்துகளை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

மக்கள் மத்தியில் ஆக்கப்பூர்வமான விவாதங்களை ஊக்குவிப்பதில் ஊடகங்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு என்றும் அவர் கூறினார்.

ஊடகங்கள் உயரிய தார்மீக நெறிகளுடன் செயல்பட வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

சிவில் விமானப் போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஜோத்பூரில் தொடங்கி வைக்கிறார்.

ராஜஸ்தான் மாநிலத்திற்கு செல்லும் பிரதமர், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

ஜோத்பூர் விமான நிலையத்தின் புதிய முனைய கட்டிடத்தையும் அவர் திறந்து வைக்கிறார்.

**480** கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டம், ஆண்டுக்கு **20** லட்சம் பயணிகளை கையாளும் திறன் கொண்டதாகும்.

இதனைத் தொடர்ந்து **Balotra**-வில் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

நாட்டின் முதல் பசுமை எரிசக்தி, சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ ரசாயன வளாகத்தையும் அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஜெய்ப்பூரில் **13** ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மெட்ரோ இரண்டாம் கட்ட பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

<<<<<>>>>>>

ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்படுவார்கள் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு கட்சிகளில் இருந்து த.வெ.க.வில் இணைபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது வழக்குகள் இருந்தால் விசாரணை தொடரும் என்று கூறினார்.

ஊழல் மற்றும் முறைகேடு தொடர்பான வழக்குகளில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டதில் சட்டமீறல் ஏதும் இல்லை என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

பிளாஸ்டிக் இல்லா தமிழகத்தை உருவாக்குவதில் பொதுமக்களின் பங்களிப்பு மிக அவசியம் என்று மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் கூறியுள்ளார்.

மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற பிளாஸ்டிக் பைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய அவர், பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தி தூக்கி எறியப்படுவதால் மண் வளமும் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறினார்.

பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணிப் பைகளை பயன்படுத்துவதை அனைவரும் அன்றாட பழக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று வழிகளை பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

தானியங்கி பட்டா மாறுதல் சேவை எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், ஏற்கனவே உள்ள நடைமுறையில் சில இடர்பாடுகள் களையப்பட்டுள்ளாக கூறியுள்ளார்.

தானியங்கி பட்டா மாறுதல் மென்பொருளில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் **15** நாட்களுக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் உட்பிரிவு அல்லாத இனங்களில் தானியங்கி முறையில் பெருவாரியான பட்டாக்கள் மாறுதல் செய்யப்படும் என்றும் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

பயிர்க் கடன் தள்ளுபடி குறித்து முதலமைச்சருடன் ஆலோசித்த பிறகு அறிவிப்பு வெளியிடப்படும் என்று வேளாண்துறை அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நேற்று சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. ஷாஜகான் மற்றும் அதிகாரிகளுடன் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுடன் அவர்களது கோரிக்கை தொடர்பாக ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விரைவில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ள வேளாண் நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் கோரிக்கைகள் சேர்க்கப்படும் என்றும், இதுதொடர்பாக விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களுடன் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகம் முழுவதும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் என 41 இடங்களில் நேற்று லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர்.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரசு சேவைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தாலும், சில அலுவலகங்களில் பல்வேறு சேவைகளுக்கு லஞ்சம் கேட்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வந்தன.

இதையடுதது இந்த சோதனை நடத்தப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை தெரிவித்துள்ளது.

இந்த சோதனையின்போது கணக்கில் வராத பணம் மற்றும் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>>

கோவை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று ஒருசில இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹோர்முஸ் நீரிணையில் கன்னி வெடிகளை அகற்றும் பணியில் சிறப்பு கப்பலை ஃபிரான்ஸ் ஈடுபடுத்தியுள்ளது.

---------

பாலஸ்தீன மறுசீரமைப்பு பணியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்று இந்தியாவுக்கான அந்நாட்டுத் தூதர் திரு. அப்துல்லா அபு ஷாவேஸ் தெரிவித்துள்ளார்.

------------

அமர்நாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் மூன்றாவது குழுவினர் பலத்த பாதுகாப்புடன் இன்று அதிகாலை ஜம்முவில் இருந்து புறப்பட்டுச் சென்றனர்.

-------------

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி பத்மஜா நேற்று ஆய்வு செய்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் தாயுமாணவர் திட்டத்தின்கீழ் இன்றும் நாளையும் மூத்த குடிமக்களுக்கு இல்லங்களுக்கே சென்று பொது விநியோகப் பொருட்கள் வழங்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------

தமிழக அரசின் ''நம்ம அரசு'' வாட்ஸப் தளத்தை மேம்படுத்துவது தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார், முன்னணி சமூக வலைதள நிறுவனங்களுடன் நேற்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் அருகே கடல்மங்கலம் கிராமத்தில் உள்ள வேணுகோபால சுவாமி கோயிலில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

நாட்டிலேயே பள்ளிகளில் செஸ் போட்டிகளை நடத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது என்று கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று நூல் வெளியீட்டு விழா ஒன்றில் பேசிய அவர், புதிய வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாகவே செஸ் போட்டியில் பல உலகச் சாம்பியன்கள் தமிழகத்தில் இருந்து உருவாகி வருகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

செஸ் விளையாட்டில் சாதனை படைக்க பல நாடுகள் பெருமளவில் முதலீடு செய்து வருவதாகவும், அமெரிக்கா, சீனா, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் சர்வதேச போட்டிகளில் வலுவான வீரர்களுடன் களமிங்கியுள்ளதால் இந்திய வீர ர்களும் சவாலை சந்திக்க தங்களை மேலும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு. விஸ்வநாதன் கேட்டுக்கொண்டார்.

--------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு அர்ஜென்டினா, சுவிட்சர்லாந்து, எகிப்து நாடுகள் முன்னேறியுள்ளன.

மியாமியில் இன்று காலை நடைபெற்ற நாக்-அவுட் சுற்று ஆட்டத்தில் அர்ஜென்டினா 3-2 என்ற கோல் கண்கிகல் கேப் வெர்தே அணியை வென்றது.

நேற்று டல்லாசில் நடைபெற்ற நாக்-அவுட் போட்டியில் எகிப்து **4-2** என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

வான்கூவரில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் சுவிட்சர்லாந்து **2-0** என்ற கோல் கணக்கில் அர்ஜீரியாவை வீழ்த்தியது.

<<<<<>>>**END**>>>>>>>>>